செ.வெ.எண் - 16 நாள்: 05.08.2019

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அதிக மகசூல் மற்றும் லாபகரமான கால்நடை வளர்ப்புக்கு அரசு மானியத்துடன் கூடிய தீவன பயிர் அபிவிருத்தி திட்டத்தில் விவசாயிகள் பங்கு பெற்று பயன் பெறலாம்.

கால்நடைகளின் உற்பத்தி திறனுக்கு பசுந்தீவனம் மிகவும் இன்றியமையாதது.

பசுந்தீவன பற்றாக்குறையை நீக்கி பால் உற்பத்தியை அதிகரிக்கவும் மற்றும் இனப்பெருக்க குறைபாடுகள் களையவும் மாடுகளுக்கு தேவையான பசுந்தீவனம் அளிக்க வேண்டும்.

இதனை கருத்தில் கொண்டு தமிழக அரசு கடந்த 6 ஆண்டுகாலமாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

அரியலூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலமாக நடப்பாண்டில் அரசு 100 சதவீதம் மானியத்துடன் சுடிய மாநில தீவன பயிர் சாகுபடி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

அதன்படி அரியலூர் மாவட்டத்தில் நிலையான மற்றும் நீடித்த பசுந்தீவனம் உற்பத்தி செய்யும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகளுக்கு, இரண்டு கால்நடைகளுக்கு ஆண்டு முழுமையும் பசுந்தீவனம் அளித்திட ஏதுவாக, இறவையில் கோ-4 அல்லது கோ-5 புல் கரணைகள் 4-சென்டிலும், மறுதாம்பு தீவன சோளம் 2 சென்ட், ஆப்ரிக்கன் நெட்டை மக்காசோளம் 1 சென்ட், தீவன தட்டை பயிர் 1.5 சென்ட், வேலிமசால் 1.5 சென்ட் என்ற அளவில் ஒரு பயனாளிக்கு 10 சென்ட் என இதில் அதிக பட்சமாக ஒரு பயனாளி 1 ஏக்கர் வரை பயன் பெறலாம்.

பாசன வசதி இல்லாத விவசாயிகளுக்கு மானாவாரியில் தீவன உற்பத்திக்காக தீவன சோளம் மற்றும் தீவன தட்டைப்பயிர் ஒரு பயனாளிக்கு 0.25 ஏக்கரில் இருந்து அதிக பட்சமாக 2 ஏக்கர் வரையிலும் வழங்கப்படும்.

மேலும் தமிழக அரசின் கூடுதல் தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அரியலூர் மாவட்டத்தில் 400 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகளுக்கு உரத்துடன் கூடிய தீவன சோளம் மற்றும் தீவன தட்டை பயிர் உள்ளடக்கிய தீவன விதை பை வழங்கப்படவுள்ளது. ஒரு பயனாளிக்கு 0.25 ஏக்கரில் இருந்து அதிக பட்சம் 2 ஏக்கர் வரை இத்திட்டத்தில் பயன்பெறலாம்.

இத்திட்டத்தில் இலவச கறவை மாடுகள் பெற்ற விவசாயிகள், சிறு, குறு விவசாயிகள், ஆவின் பயனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இனவாரியாக 30 சதவீதம் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள்.

ஒருவர் ஒரு திட்டத்தில் மட்டுமே சேர முடியும். கடந்த ஆண்டு பயன்பெற்ற விவசாயிகள் இந்த திட்டத்தில் பயன்பெற முடியாது.

இந்த திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் அருகாமையில் உள்ள கால்நடை மருத்துவ நிலையங்களில் கால்நடை மருத்துவரை அனுகி தங்கள் விண்ணப்பத்தினை அளித்து பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**